**FIRST INFORMATION REPORT** — TAMIL NADU POLICE

முதல் தகவல் அறிக்கை — INTEGRATED INVESTIGATION FORM-I

(Under Section 154 Cr.P.C.)

(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C 8093816

1. District : Tirunelveli மாவட்டம் | PS: Vigilance and Anti Corruption காவல்நிலையம் | Year: 2018 ஆண்டு | FIR No: 07/2018 மு.த.அ. எண் | Date: 06.12.2018 நாள்

2. (i) Act சட்டம்: PC (Amendment) Act 2018 — Sections பிரிவுகள்: 7 (a)

   (ii) Act சட்டம்: — Sections பிரிவுகள்:

   (iii) Act சட்டம்: — Sections பிரிவுகள்:

   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் — Date from : நாள் முதல் 05.12.2018 14.30 hrs — Date to : நாள் வரை

   Time Period : நேர அளவு — Time from : நேரம் முதல் — Time to : நேரம் வரை

   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 06.12.2018 — Time : நேரம் 09.00 hrs

   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் — Time : நேரம்

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக — Written

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் — NanguneriTaluk Office 35Km South

   Beat Number : முறைக் காவல் எண் — (b) Address : முகவரி

   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : — District :

   இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் — மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் — S.PAULDURAI — (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் — Tr.SUBBIAH

   (c) Date / Year of Birth நாள் / பிறந்த ஆண்டு 08.01.1962 — (d) Nationality : நாட்டினம் INDIAN — (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

   Date of Issue : வழங்கப்பட்ட நாள் — Place of Issue : வழங்கப்பட்ட இடம்

   (f) Occupation : தொழில் Businessmen — (g) Address முகவரி 1/2, Mariamman Kovil Street, Kokkirakulam. Tirunelveli-9

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

   Tr.Vargees, Tahsildar,Nanguneri Taluk Office, Tirunelveli District.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
   குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

   No delay.

* GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

· Not arise

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

பணிந்து சமர்ப்பிக்கிறேன். இன்று 06.12.2018-ம் தேதி காலை 09.00 மணிக்கு நான் (ச.சிவசங்கரி, காவல் ஆய்வாளர்) நிலையத்தில் பணியில் இருந்தபோது திருநெல்வேலி கொக்கிரகுளம் கதவு எண் 1/2 மாரியம்மன் கோவில் தெருவில் வசித்து வரும் திரு.சுப்பையா என்பவரின் மகன் திரு.சு.பால்துரை என்பவர் நிலையம் ஆஜராகி ஒரு புகார் மனு கொடுத்தார். அந்த புகார் மனுவை பெற்று எதிரி மற்றும் வாதியின் நடத்தை குறித்து தொடர்பாளர்கள் மூலம் ரகசிய விசாரணை செய்து, விசாரணையிலிருந்து எதிரி திரு.வர்கீஸ் வாதி திரு.பால்துரை என்பவரிடம் செல்வநிலை சான்று வழங்குவதற்காக ரூ.25,000/- லஞ்சமாக கேட்டதன் மூலம் ஊழல் தடுப்பு சட்டத்தின்கீழ் வழக்குப்பதிவு செய்ய முகாந்திரம் இருந்த காரணத்தினால் அந்த தகவலை சென்னை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு தென்சரக காவல் கண்காணிப்பாளர் அவர்களுக்கு தொலைபேசியின் வாயிலாக தகவல் தெரிவித்து அன்னாரின் அனுமதி பெற்று 06.12.2018 காலை 11.00 மணிக்கு திருநெல்வேலி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண் 07/2018 u/s 7(a) of PC (Amendment) Act 2018 என வழக்குப் பதிவு செய்தேன். மனுவின் விபரம் பின்வருமாறு, அனுப்புனர் சு.பால்துரை, வயது 56/2018 த/பெ திரு.சுப்பையா, 1/2, மாரியம்மன் கோவில் தெரு, கொக்கிரகுளம், திருநெல்வேலி -9. பெறுனர் காவல் ஆய்வாளர், லஞ்ச ஒழிப்புத்துறை, திருநெல்வேலி, ஐயா, நான் மேலே சொன்ன விலாசத்தில் எனது மனைவி லெட்சுமி மற்றும் எனது பையன் ராஜா மற்றும் மகள் சுமதி ஆகியோருடன் குடியிருந்து வருகிறேன். நான் சொந்தமாக M.S.P என்ற பெயரில் மினி பஸ் வைத்து தொழில் செய்து வருகிறேன். என் பெயரில் 5 மினி பஸ் பெர்மிட் உள்ளது. தற்போது என்னால் என் உடல்நிலை காரணமாக என் மோட்டார் தொழிலை சரிவர கவனிக்க இயலாத காரணத்தினால் அதில் இரண்டு பெர்மிட்களை என் மனைவி லெட்சுமி மற்றும் எனது அக்கா பையன் தாமஸ்துரை ஆகியோர் பெயருக்கு மாற்ற முடிவு செய்தேன். அதற்கு எனது மனைவி மற்றும் மருமகன் பெயரில்

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS..............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் .............................. பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு .............................................. காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

S. Paul dura 06/12/18

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

6/12/18 Inspector of Police SPE. Tirunelveli

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court: 6-12-18
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name: பெயர் C. SIVASANKARI
Rank: நிலை INSPECTOR No. எண் ..........

செல்வநிலை சான்று தேவைப்பட்டது. அதனால் எனது மனைவி லெட்சுமி பெயரில் இரைப்புவாரி கிராமம் சர்வே எண் 65/3B ல் உள்ள 43 செண்டில் உள்ள இடத்திற்கு ரூபாய் 50 ஆயிரத்துக்கு செல்வநிலை சான்று (சால்வன்சி சர்டிபிகேட்) கேட்டு 02.11.2018 அன்றும், எனது அக்கா பையன் தாமஸ்துரை பெயரில் உள்ள சிங்கிகுளம் கிராமம் ச.எண் 215/1ல் உள்ள 2 ஏக்கர் 40 சென்டுக்கு ரூ.50,000/-க்கு செல்வநிலை சான்று கேட்டு 05.12.2018 அன்றும் நான்குனேரி தாலுகா அலுவலக 'இ' சேவை மையத்தின் மூலம் நான்குனேரி தாசில்தாருக்கு மனு செய்திருந்தேன். நான் நாலைந்து முறை நான்குனேரி தாலுகா அலுவலகம் சென்று தாசில்தார் திரு.வர்கீஸ் அவர்களை சந்தித்து எனக்கு விபத்தில் காலில் (இடது) பிளேட் வைத்திருப்பதால் என்னால் அடிக்கடி அலைய முடியவில்லை. எனவே என்னுடைய மனைவி பெயரில் மனு செய்திருந்தது சம்மந்தமாக செல்வநிலை சான்று குறித்து சீக்கிரம் தாருங்கள் என்று கேட்ட போது அவர் என்னிடம் இன்னும் மனு வரவில்லை என்று கூறிக்கொண்டே இருந்தார். பின்பு நேற்று (05.12.2018) என் மருமகன் பெயரில் மனு செய்த பொழுது பிற்பகல் சுமார் 2.30 மணியளவில் நான்குனேரி தாசில்தார் திரு.வர்கீஸை அவரது அலுவலகத்தில் வைத்து சந்தித்து ஏற்கனவே எனது மனைவி பெயருக்கு அனுப்பிய செல்வ நிலை சான்று குறித்தும் என்னுடைய மருமகன் பெயருக்கு மனுசெய்தது குறித்து கேட்டேன். அதற்கு அவர் என் மனைவி பெயரில் செய்த மனு தாலுகா அலுவலகம் வந்துவிட்டது என்றும் அதற்குரிய செல்வநிலை சான்று வாங்கிக்கொள்ளலாம் எனவும், என் மருமகன் பெயரில் உள்ள மனு வி.ஏ.ஓ, மற்றும் ஆர்.ஐ விசாரணை முடித்து வந்தவுடன் செல்வநிலை சான்று தருகிறேன் என்று சொன்னார். மேலும் இரண்டு செல்வநிலை சான்று வழங்க ரூபாய் 30,000 தந்தால்தான் சான்று தருவேன் என்று சொன்னார். அதற்கு நான், தற்போது என் தொழில் சரியாக இல்லை என்னால் அவ்வளவு பணம் தரமுடியாது சார் என்று கூறினேன். அதற்கு தாசில்தார் திரு.வர்கீஸ் அவர்கள் ரூபாய் 5,000/- த்தை குறைத்துக்கொண்டு ரூபாய் 25,000/- ஆவது நாளை (06.12.2018) மதியத்திற்கு மேல் எனது அலுவலகத்திற்கு வந்து தந்தால்தான் நான் செல்வநிலை சான்று தருவேன் என்று சொல்லிவிட்டார். மேலும் நாளை 100 ரூபாய்க்கு செல்லான் வங்கியில் கட்டவேண்டும் அதனை கட்டிவிட்டு மதியத்திற்கு மேல் வந்து என்னை பாருங்கள் என்று சொன்னார். நான் இடத்தையெல்லாம் பார்க்க வேண்டி உள்ளது என்றும் சொன்னார். நானும் வேறு வழியில்லாமல் பணம் ஏற்பாடு செய்து தருவதாக கூறிவிட்டு வந்துவிட்டேன். ஆனால் வீட்டிற்கு வந்து யோசித்துபார்த்தபோது எனக்கு நான்குனேரி தாசில்தார் அவர்களுக்கு லஞ்சமாக பணம் கொடுத்து செல்வநிலை சான்று வாங்க விருப்பமில்லை. எனவே என்னிடம் லஞ்சம் கேட்ட நான்குனேரி தாசில்தார் திரு.வர்கீஸ் அவர்கள் மீது தக்க நடவடிக்கை எடுக்க கேட்டுக்கொள்கிறேன். திரு.வர்கீஸ் அவர்கள் கேட்ட லஞ்ச பணம் ரூ.25,000/- வைத்துள்ளேன். மேலும் திரு.வர்கீஸ் அவர்களை பிடிப்பதற்கு முழு ஒத்துழைப்பு தருகிறேன். இப்படிக்கு (sd) சு.பால்துரை.06.12.18. Sir, Received the complaint on 6.12.18 at 09.00 hrs and conducted confidential enquiry, I registered a case in Tirunelveli V&AC Cr.No.7/2018 u/s 7 (a) of Prevention of Corruption (Amendment) Act, 2018 on 6.12.18 at 11.00 hrs.sd. C.Sivasankari. Inspector of Police, V&AC, Tirunelveli.

அசல் FIR, அசல் புகார் மனு ஆகியவற்றை கனம் சிறப்பு நீதிபதி, ஊழல் வழக்குகளை விசாரிக்கும் சிறப்பு நீதிமன்றம் திருநெல்வேலி அவர்களுக்கும் நகலை உயரதிகாரிகளுக்கும் அனுப்பி வைத்தேன். ஒரு நகலை நான் என்னுடைய விசாரணைக்காக வைத்துக்கொண்டேன்.

(signature) 6/12/18

INSPECTOR OF POLICE
Vigilance and Anti-Corruption
Tirunelveli Detachment
TIRUNELVELI